# பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம்

## BHARATHATHARSHANA LIVELIHOOD ORGANIZATION.

இலங்கை உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின் அபிவிருத்திப்பின்னடைவுகளுடனும், கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரத்தினாலும் பின்தங்கி. காணப்பட்ட அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி வவுனியா, மன்னார் மாவட்டங்களில் வாழும் வறிய மக்களின் நலன் மேம்பாட்டிற்க்காக புலம் பெயர்ந்து வாழும் எம் சமூகம், எம் மக்கள் நலம் கருதி நேசக்கரம் நீட்டி எம் தாயக உறவுகளுக்கு , எம்மவர் உதவியை பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம் மூலம் ஒழுங்கமைத்து குடும்ப வாழ்வாதாரம், கல்வி உதவி, உணவு உதவி, குடி நீர் வசதி, போன்ற திட்டங்களுக்காக கிராம வாழ் மக்கள் பங்கேற்ப்புடன் 2020 ஆம் ஆண்டில் ஏற்ப்பட்ட அசாதாரன சூழலிலும் கரம் நீட்டி கரம் கொடுத்த நற்கொடையாளார்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

வறட்சியினால் அவதியுற்று தினமும் துளி கண்ணீர் சிந்தி வானம் பார்த்து காலம் கடந்தாலும் மக்களின் நலன் கருதி நீரில்லா குறையை தீர்க்க நேச கரம் நீட்டிய பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம். பொது மக்கள் பாவனைக்காக 10 பொதுக் கிணறுகளை அமைத்து கொடுத்து, நீண்ட கால குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு கண்டது.



- ஒரு நேர உணவு உண்பதற்க்கு வசதியின்றி காணப்பட்ட 605 குடும்ப உறவுகளுக்கு உலர் உணவுப் பொருட்களை பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனத்தினால் வழங்கிவைக்கப்பட்டதுடன். மேலும் விசேடமாக அடையாளப்படுத்தப்பட்ட வறுமையான குடும்பங்களுக்கு அன்பில் திட்டத்தினுடாக உலர் உணவுப் பொருட்களை வழங்கியமை.

- மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்றான உடைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம் 650 மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய தேவையான உடைகளையும் வழங்கி வைத்தது,

- சமய, கலாச்சார, விரத நினைவு தின நாட்களில் பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம் 2180 பேருக்கு மதிய உணவுகளையும் வழங்கி வைத்தது.

- அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில், தொழில் இல்லாமல் வறுமையில் அவதியுற்று பிறரிடம் தங்கி வாழ்ந்த குடும்பங்களை இனம் கண்டு அதில் தெரிவு செய்யப்பட்ட 43 குடும்பங்களுக்கு வாழ்வின் ஒளிவிளக்காய் மிளிர வாழ்வாதாரத்தினை நற்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்புடன் வழங்கி வைத்தது.

- *'கல்வி இல்லாமல் வாழ்கை இல்லை'* என்பதனை உணர்ந்த பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம் கல்வி செயற்பாடுகளை வசதியின்மையினால் தொடர முடியாத 36 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், 5 மாணவர்களுக்கு மிதி வண்டியும், வழங்கி வைத்ததுடன், 14 மாணவர்களுக்கு மாதாந்தம் நிதி உதவி தொகையையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

- மேலும் 2 பயனாளிகளுக்கு மலசலகூட வசதி, 2 பேருக்கு மருத்துவ உதவி, நிழல் திட்டத்தின் கீழ் 110 குடும்பங்களுக்கு மரக்கன்றுகளும், பாலர் பாடசாலைக்கான குடிநீர் இணைப்பும் வழங்கியமை.

- கிராமிய வாழ் ஆண் ,பெண்களுக்கான தொழில்வாய்பினை ஏற்படுத்தும் வகையிலும், சுய வருமானத்தினை அதிகரிக்கும் நோக்குடன் பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம் செங்கல் உற்பத்தி ஆலையினை ஆரம்பிப்பதற்க்கான திட்டமிடப்பட்டது.

- மக்கள் நலன் கருதி வசதியற்றவர்களுக்கு நலன்புரிச்சேவையாக கதிரைகள் ,சமையல் பாத்திரங்கள் ஒலி பெருக்கி வசதிகள் போன்றனவற்றையும் இலவசமாக வழங்கி வருகின்றது.



தாயகத்தில் வாழும் உறவுகளின் துன்பத்தை பகிர்ந்து எம் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தேவை அறிந்து உதவிக்கரம் கொடுத்து, எம்மை பலப்படுத்தும் புலம் பெயர் வாழ் தமிழ் மக்களுக்கும்,சக பிற நாட்டு மக்களுக்கும் நேர்த்தியான சேவை புரியும் பொதுப் பணி தொண்டர்களுக்கும் இணைந்த பொது நிறுவனங்களுக்கும் 2021ஆம் ஆண்டு புதுவருட வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து தொடரும் இத் தார்மீக பணியில் இனைய வேண்டும் என வேண்டுகின்றோம் 'இயன்றதை செய்வோம் இல்லாதவருக்கு' நன்றிகளுடன்.

***பரததர்சனா நடனாலயம்***

***பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனம்***

01.01.2021